29th October 1958]

SRIMATHI T. N. ANANDANAYAKI : அரசாங்கம் நடத்துகிற ஆரம்பப் பள்ளிகளைக் காட்டிலும், பாதிரிமார்கள் நடத்துகிற ஆரம்பப் பள்ளிகளில். குழந்தைகளுக்கு மிகவும் திறமையோடு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள், ஆகவே, " go-slow policy " யானது தனிப் பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளைப் பாதிக்கும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்து, கொள்கையை மாற்றிக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளில் நல்ல பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. மோசமான பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. அதே மாதிரி அரசாங்கம் நடத்துகிற பள்ளிக்கூடங்களிலும் சில நன்றாக நடக்கின்றன, சில மோசமாக நடக்கின்றன. இதையெல்லாம் திருத்தவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய நோக்கம். தனிப்பட்டவர்கள்தான் நன்றாக நடத்த முடியுமென்று நினைப்பது தவறு.

SRI A. VEDARATHNAM : டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்த கமிட்டியில், இந்த உதவி பெறும் தனியார் ஆரம்பப் பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை. ஆகவே அவைகளுக்கு ஆக்கம் அளிக்கக்கூடாது என்று சிபாரிசு செய்திருக்கிறார்களா ? அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அறிக்கையில் அவ்வாறுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஸ்ரீமதி அநந்தநாயகி படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு.) அதன் காரணமாக, முழுப் பிரச்னையும் அரசாங்கத்தில் பரிசீலனையில் இருக்கிறது. அதாவது, எந்த முறையில் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் நடத்துவதைப்பற்றி எந்தவிதமான முறைகளைக் கையாளவேண்டுமென்று முடிவு செய்வதற்காக இது பரிசீலனையிலிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, till the ban on opening of new schools by private agencies could be lifted after a decision in the matter is taken by the Government, will the Government consider the possibility of allowing private agencies to run such schools if they do not come to Government for teaching aid and also recognise such schools if they are run efficiently?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is also a matter for consideration, Sir.

Building works

* 700 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the names of building works executed by the Public Works Department and the amount spent without first preparing the estimates therefor in 1957–58 ; and

(*b*) the reasons for executing these works without first preparing the estimates?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The attention of the Member is invited to the Paper [a] laid on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : மதிப்பீடு தயாரிக்காமல் போலீஸ்காரர்களுக்காகக் கட்டிடங்களும், எஞ்சினியரிங் கல்லூரிக்காக லேபொரட்டரியும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் எதிர்பார்க்கப்பட்ட

[a] Printed as Appendix VIII on page 96 infra.

செலவினங்களாகத்தான் இருக்கவேண்டும். என் மதிப்பீடு தயாரிக்காமல் இக்கட்டிடங்களைக் கட்டுவதற்குச் சர்க்கார் அனுமதியளித்தது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : சீக்கிரமாகக் கட்டவேண்டிய அவசியத்தை முன்னிட்டு அவைகள் கட்டப்பட்டன. குறிப்பாக, போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டியதும், ஆஸ்பத்திரிகள் கட்டியதும், அந்த வேலைகளை முடிப்பதில் தாமதம் ஏற்படக்கூடாது, அவைகள் துரிதமாக நடக்கவேண்டுமென்பதற்காக, எஸ்டிமேட்டுகள் தயாரிப்பதற்கு முன்னரே வேலை தொடங்கினால் நல்லது என்று நினைத்துத்தான் கட்டப்பட்டன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, first of all I would like to know from the Hon. Minister whether this procedure is in order and whether it will not be subject to audit criticism afterwards? Then, I would like to know whether the estimates at least were sanctioned?

THE HON. SRI P. KAKKAN : It is not being done always. Only in case of urgency we have given instruction to carry on the work.

SRI S. NAGARAJA MONIGAR : வெகு வேகமாக நாம் முன்னேறவேண்டிய நேரத்திலே, மாகாணம் பூராவிலுமாக எடுத்துக் கொண்டால், இம்மாதிரி ஒன்றிரண்டு வேலைகள் நடந்திருக்கலாம். ஆனால், மதிப்பீடு போடாததினால், பணம் விரயமாயிருக்கிறதா என்பதுதான் கேள்வி என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

11-30 a.m. **III.—ADJOURNMENT MOTION *RE* CUT IN THE IMPORT OF RAW FILMS.**

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri K. Anbazhagan. Before allowing the hon. Member who gave notice of the motion to make a preliminary statement and giving my ruling, I will read the motion and ascertain from the Government the extent of their responsibility in the matter. The motion is :

'The House resolves to adjourn the business of the House for the purpose of discussing definite matter of urgent public importance, namely, the failure of the State Government in not pressing upon the Union Government to restore the cut in the import of raw films which is essential to support a major industry in the country and also to maintain about a million labourers in the respective jobs connected with the cine industry.'

I would like to know what the responsibility of the State Government is in this matter. If the State Government have no responsibility in the matter there is no point in allowing the motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, constitutionally we have no responsibility in this matter. Factually also the statement is not correct because whatever steps are necessary are being taken by the Government of Madras.